சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.64/2024

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–8வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. (1,2 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தெய்வராணி | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | பெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்சமயம் பொள்ளாட்சி கிழக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.05.2023ம் தேதி காவல் நிலைய அலுவலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்பவர் இவ்வழக்கு சம்மந்தமாக அ.சா.1 விக்னேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.125/2023 சட்டப்பிரிவு 328 இ.த படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

2. மேற்படி அன்றையே தினமே காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கு புலன் விசாரணை சம்மந்தமாக வழக்க கோப்புகளை என்னிடம் சமர்பித்தார். மேற்படி இந்த வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்க எடுத்துக்கொண்டு சம்பவ இடமான மாதவகிருஷ்ணா வீதி, பரணி லாட்ஜ் முன்பு சாட்சிகள் உதயகுமார், நல்லரசன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன்.

3. மேற்படி அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இவ்வழக்கின் சம்பவயிட சாட்சிகளான விக்னேஷ், பிராசாந்த், சரவணகுமார், முகமது இபுராகிம், உதயகுமார் மற்றும் நல்லரசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகளை தேடி சென்று சாட்சிகள் அடையாளம்காட்ட கிருஷ்ணா தியேட்டர் முன்பு நின்றுகொண்டிருந்த எதிரிகளை 14.30 மணி அளவில் கைது செய்து அவர்களை விசாரிக்க தங்களது குற்றங்களை ஒப்புக்கொண்டு எதிரி விக்னேஷ் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை உடனிருந்த சாட்சிகள் உதயகுமார்,

நல்லரசன் முன்பு 15.00 மணிக்கு பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரிகளிடம் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து உடனிருந்த மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் 1ம் எதிரி விக்னேஷ் என்பவர் ஆஜர் செய்த 1. பணம் ரூ.1,30,000/– 2. Topcynta 100 mg மாத்திரைகள் 80. 3. Disposal சிரஞ்சி ஊசிகள் 80 4. Disposal Single use சிரஞ்சி 6 ஆகியவற்றை உடனிருந்த சாட்சிகளான உதயகுமார், நல்லரசன் முன்பு 15.45 மணிக்கு மகஜரில் கைபற்றினோம். மேலும் படிவம் 91 அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4.இவ்வழக்கின் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு எதிரிகளை வழக்கு சொத்துக்களுடன் அனுப்புவைத்தோம். மேலும் இந்த வழக்கில் சட்டம் சார்ந்த மருத்துவக் கல்லூரி மருத்துவர் நந்தகுமார் அவர்களிடம் மேற்படி போதைக்கு பயன்படுத்திய மாத்திரையின் தன்மையை குறித்து அறிக்கை பெற்று அந்த அறிக்கையில் மருத்துவர் மேற்படி போதை மாத்திரைகள் மருத்துவர் பரிந்துரையில்லாமல் உடலில் செலுத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று கருத்துரை வழங்கினார்.

5. மேற்படி 25.09.2023 அன்று நந்தகுமாரை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தோம். இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் விக்னேஷ், ஜீவாநந்தம் ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவு 328 இ.த படி 25.09.2023ம் தேதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–

1. சொன்னதேதியில், சொன்னநேரத்தில், சொன்னவிதத்தில் புகார் பெறவில்லை அதன்படி காவல் உதவி ஆய்வார் பிரபாகரன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சான்று பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் வழக்கிற்க்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்ற சொன்னால் சரியல்ல. சொன்ன தேதி, சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யப்படவில்லை என்றாலும் அதன்பேரில் எதிரிகள் வாக்குமூலம்கொடுக்கவில்லை என்பதால் அதன்படி சான்று பொருட்கள் கைபற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கு இவ்வழக்கிற்க்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**